# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in**


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 12 / 2016**

திரு. M. ஹபீப் முகமது,
த/பெ மைதீன் பாச்சா,
5/79, V.P. நகர்,
பண்டாரவாடை – 614 204,
பாபநாசம் வட்டம்,
தஞ்சாவூர் வட்டம். ..... மேல்முறையீட்டாளர்

எதிர்

உதவி பொறியாளர்/இ&ப.
மாரியம்மன் கோவில்
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாகை மெயின் ரோடு,
மாரியம்மன் கோவில் – 613 501.

. . . . . எதிர் மனுதாரார்
(திரு. தெ. கோபிநாதன், உதவி பொறியாளர்
மாரியம்மன் கோவில்)

**கேட்புரை நாள் : 28–4–2016**

**ஆணை நாள் : 17–6–2016**

திரு. M.ஹபீப் முகமது, த/பெ மைதீன் பாச்சா, V.P. நகர், பண்டாரவாடை அவர்களின் 1.2.2016 நாளிட்ட மனு, மேல்முறையீட்டு மனு எண்.12/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல்முறையீட்டு மனு மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.4.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் எதிர்தரப்பினரால் கேட்புரை நாளில்

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

மேல்முறையீட்டாளரின் கீழ்கண்ட கோரிக்கைகளை தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்.

(i) மின் இணைப்பு எண்.351ல் படிவம் VII கண்ட விபரப்படி ஆய்வு உறுதி செய்து 12/8 கணக்கீடு காலத்தில் அதிகப்படியான கட்டணம் ரூ.318/– நிறுத்தம் அடிப்படையில் மறு மின்இணைப்பு வழங்க வேண்டும்.

(ii) மின்இணைப்பு எண்.353ல் படிவம் VII கண்ட விபரப்படி ஆய்வு உறுதி செய்து 20.8.2014 அன்று திரு. ஆர். சம்பத் பெயரில் மாற்றம் செய்தது தவறு.

(iii) மேற்படி மின்இணைப்பில் 2/2008 முதல் முறைகேடான உபயோகம் உள்ளது. மின் விதிப்படி நடவடிக்கை எடுத்து நிவாரணம் அளிக்கவும்

(iv) மின்இணைப்பு எண்.351, 353 மற்றும் 83 ஆகியவை மனுதாரரின் உரிமை ஆவணம் 317/85 பட்டா எண்.627, 597 உள்ள இடத்தில் உள்ளது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

### 2. வழக்கின் சுருக்கம்

2.1 மேல்முறையீட்டாளர், தன்னுடைய முறையீட்டை மின்குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார். மன்றம் தன்னுடைய தீர்வை 22.12.2015ல் தெரிவித்துள்ளது. அத்தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

2.2 மன்றத்தின் 22.12.2015 நாளிட்ட தீர்வு 18.1.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் தான் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் அந்த கடிதத்தின் நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.12/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் 22.12.2015 நாளிட்ட தீர்வு 18.1.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"இறுதி அறிக்கை*
*புகார் மனுதாரர் கூட்டத்திற்கு வரவில்லை என்றாலும் இப்புகார் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மின்இணைப்பு எண்.351 மின்துண்டிப்பு செய்யப்பட்டு 2 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால் மின்துண்டிப்பை நிரந்தரமாக துண்டிக்கப்பட்டுவிட்டது. மேலும், மின்இணைப்பு வேண்டுமெனில் உரிய ஆவணங்களை கொடுத்து மின்இணைப்பை பெற்றுக் கொள்ளலாம். மின்இணைப்பு எண்.353 அமைந்துள்ள இடத்திற்கு தங்களது பட்டா நகல் மற்றும் பத்திர நகல் தங்களால் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் தங்களது கோரிக்கை ஏற்றுக்கொள்ள இயலாது. மின்இணைப்பு எண்.83க்கு உரிய வருவாய் ஆவணங்களுடன் பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பித்தால் பரிசீலிக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் பெயர் மாற்றம் என்று தீர்வு செய்யப்படுகிறது."*

## 4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

4.1 மின்இணைப்பு எண்.351ல் டோர் லாக் அடிப்படையில் 8/2008, 10/2008, 12/2008க்கான கணக்கீடு காலங்களில் ரூ.120/– (3 x 40) என்று கணக்கீடு செய்து ஏற்கனவே கணக்கில் உள்ள ரூ.438/–ல் ரூ.120/–ஐ கழித்தால் ரூ.318/– இருப்பு உள்ளது. ஆனால், 12/2008ல் மின் துண்டிப்பு ஆகும்.

4.2 மின்இணைப்பு எண்.351ல் மின் கணக்கு அலுவலர் கணக்கு அட்டையில் '0' ரீடிங் no bill என குறியீடு செய்யப்பட்டுள்ளது. மின் கணக்கு அலுவலர் 2/2008, 4/2008 ஆகிய காலங்களில் ரூ.318+318 = 636 என்று தனி கணக்கு தொடர்ச்சியாக மினிமம் சார்ஜ் 40 x 16 ரூ.640/– கழித்து ரூ.4/– பாக்கி என்று 8/2011ல் மின்துண்டிப்பு என்றும், 8/2013ல் நிரந்தர துண்டிப்பு என்றும் உள்ளது. இரண்டு வருட கால அவகாசம் இந்த இணைப்பிற்கு பொருந்தாது.

4.3 மின்இணைப்பு எண்.351ல் முறையான கணக்குபடி 12/2008 கணக்கீடு காலத்தில் அதிகப்படியான இருப்பு ரூ.318/– என்ற அடிப்படையில் மறுஇணைப்பு அளிக்க கோரியுள்ளார். மேலும், தனி கணக்கு ரூ.636/– அடிப்படையில் 8/2011 கணக்கீடு காலத்தில் மின்துண்டிப்பு 8/2013ல் நிரந்தர துண்டிப்பு என்பதை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

4.4 மின்இணைப்பு எண்.353, 12/2007 முதல் திரு. ஆர்.ஈ. அப்துல் கரீம் பெயரில் உள்ளது ஆனால், அதற்குரிய ஆவணம் இல்லை. பெயர் மாற்றம் வாய் மொழியாக செய்யப் பட்டுள்ளது.

4.5 2/2009 கணக்கீடு காலத்திற்கான மின்கட்டணம் ரூ.40/– 11.3.2009ல் செலுத்தப்பட்டுள்ளது. 4/2009, 6/2009 மற்றும் 10/2009 கணக்கீடு காலத்திற்கான கட்டணம் ரூ.266/– செலுத்தி மின்இணைப்பு மூன்றாவது பார்ட்டிக்கு முறைகேடாக அளிக்கப்பட்டது.

4.6 மனுதாரரின் புகாரின் பேரில் மின் அலுவலர் ஆய்வு செய்து முறைகேடான உபயோகம் இல்லை என்று வாய் மொழியாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4.7 20.8.2014 அன்று போலி உரிமை ஆவணம் 2208/12 பட்டா எண்.723, புல எண்.174, உட்பிரிவு 59 என்ற ஆவணத்தின் பேரில் ஆர். சம்பத் என்ற பெயர் மாற்றம் தவறு ஆகும். எனவே, ரத்து செய்யவேண்டும் என்ற மனுதாரரின் ஆவணம் 317/85 பட்டா எண்.627/597 ஏற்கப்படவில்லை.

4.8 மின்இணைப்புகள் 351, 353, 83 ஆகியவை மனுதாரர் உரிமை ஆவணம் 317/85, பட்டா எண்.627, 597 உள்ள இடத்தில் உள்ளது என்று உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரை</u>

5.1 மின் இணைப்பு எண்.468–003–351 திரு. ஆ.யு. மைதீன் பாச்சா என்ற நுகர்வோர் பெயரில் இருந்து வந்தது. கடந்த 8/2008 மாத கணக்கீட்டின்படி door lock என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, வாரிய விதிப்படி அதற்கு முந்தைய கணக்கீட்டு மாதமான 6/2008ன் மின்பயனீட்டு கட்டணமான ரூ.438/– 8/2008 மாதத்திற்கான மின் பயனீட்டு கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 10/2008 கணக்கீட்டின்படி 30 யூனிட்டு மின்சாரம் நுகர்வோர் பயன்படுத்தியுள்ளார். 8/2008 மாதத்திற்கு மின் பயனீட்டு கட்டணமாக வசூல் செய்யப்பட்ட ரூ438/–ல் இருந்து 8/2008 மற்றும் 10/2008 மாதங்களுக்கு குறைந்தபட்ச கட்டணமாக ரூ.40/– வீதம் இரண்டு கணக்கீட்டு மாதங்களுக்கு ரூ.80/– கழிக்கப்பட்டு ரூ.358/– (ரூ.438/– ரூ.80/– = ரூ.358/–) நுகர்வோர் மின்இணைப்பில் மீதி தொகை இருந்து வந்துள்ளது. 12/2008 மாத கணக்கீட்டு மாதத்தின் போது மின் பயனீடு (current consumption) இல்லாததால் 10/2008 கணக்கீட்டு

மாதத்தின்படி நுகர்வோர் மின்இணைப்பில் இருந்த மீதி தொகையான ரூ.358/–ல் இருந்து மின் பயனீட்டு குறைந்தபட்ச கட்டணம் ரூ.40/– கழிக்கப்பட்டு (ரூ.358 – ரூ.40 = 318/–) நுகர்வோர் மின்இணைப்பில் ரூ.318/– இருப்பு இருந்தது. இம்மின் இணைப்பிற்கு அடுத்த கணக்கீட்டு மாதமான 2/2009ன் படி door lock என்பதால் இதற்கு முன் கணக்கீட்டு மாதமான 12/2009ன் படி நுகர்வோர் கணக்கில் software தவறின் காரணமாக credit செய்யப்பட்ட தொகை ஆக மொத்தம் ரூ.636/– மீதம் உள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ii) கணக்கீட்டு மாதம் 2/2009 முதல் 6/2009 வரை மின் உபயோகம் இல்லாத காரணத்தால் குறைந்தபட்ச கட்டணமாக ரூ.40 ஒவ்வொரு கணக்கீட்டு மாதமும் கழிக்கப்பட்டு ரூ.636/– (40+40+40) = ரூ.516/– நுகர்வோர் கணக்கில் தொகையாக இருந்தது. 8/2009 கணக்கீடு மாதம் முதல் 6/2011 வரை மின் உபயோகம் இல்லாததால் குறைந்தபட்ச கட்டணமாக ரூ.40 வீதம் ஒவ்வொரு கணக்கீட்டு மாதமும் கழிக்கப்பட்டு ரூ.516 – 480 = 36 நுகர்வோர் கணக்கில் மீதித்தொகையாக இருந்தது. 8/2011 கணக்கீட்டு மாதத்திற்கு மின் உபயோகம் இல்லாத நிலையில் தேவைப்படும் குறைந்தபட்ச கட்டணம் ரூ.40/– மின் நுகர்வோர் கணக்கில் இல்லாத காரணத்தால் 16.9.2011 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.4 நுகர்வோரால் இரண்டு வருட காலத்திற்குள் செலுத்தப்படாத காரணத்தால் மின் இணைப்பு நிரந்தர மின் துண்டிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு நிரந்தர மின் துண்டிப்பு அறிவிப்பு கடிதம் மின்இணைப்பு இருந்த வீடு பூட்டி இருந்த காரணத்தால் அவ்வீட்டின் கதவில் ஒட்டப்பட்டது. இம்மின் இணைப்பிற்கான கணக்கு முடிக்கப்பட்டு 27.1.2014 அன்று நுகர்வோருக்கு கடிதம் அளிக்கப்பட்டது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட கணக்கு முடிவு அறிக்கையில் சிறு தவறு இருந்ததால் மறு கணக்கு முடிவு அறிக்கை செய்யப்பட்டு 25.7.2014 அன்று நுகர்வோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இம்மின் இணைப்பு நிரந்தர மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதால் மறு மின்இணைப்பு வழங்க இயலாது. மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் அளித்தால் புதிய மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii) இம்மின் இணைப்பு நிரந்தர மின் துண்டிப்பு செய்யப்படுவதற்கு முன்பே நிலுவைத்தெகை விபரங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் இம்மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

**5.2** மின்இணைப்பு எண்.**468–003–353**க்கான விபரங்கள் – இம்மின் இணைப்பு திரு. சு.நு. அப்துல் கரீம் பெயரில் இருந்தது. கடந்த **21.8.2014** அன்று திரு. சு. சம்பத் என்பவர் இம் மின்இணைப்பு உள்ள இடம் தனக்கு உரிமை என்பதற்கான வருவாய் ஆவணங்கள், VAO சான்று, வீட்டு வரி, ரசீது பட்டா மற்றும் பத்திர நகல் ஆகியவற்றை அளித்து தனது பெயருக்கு மாற்றம் செய்துள்ளார். இம்மின் இணைப்பு வீதப்படி IAல் உள்ளது. மின்இணைப்பு உபயோகத்தில் எவ்வித முறைகேடும் இல்லை. பின்னைநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் பட்டா எண்.**723** புல எண்.**174/59**க்கான உரிமையாளர் தொடர்பான ஆவணங்கள் மின்சார வாரிய தரப்பில் கோரப்பட்டன. கடந்த **8.3.2016** அன்று மேற்படி கிராம நிர்வாக அலுவலரால் அளித்த ஆவணத்தில் மேற்படி புல எண் திரு. சு. சம்பத் அவர்கள் பெயரில் உள்ளது என உறுதி செய்யப்பட்டது.

**5.3** மின்இணைப்பு எண்.**468–003–83**க்கான விபரங்கள் – மின்இணைப்பு திரு . ஆ. யு. மைதீன் பாச்சா என்பவர் பெயரில் உள்ளது. மின்இணைப்பு உள்ள இடம் தற்போது திரு. ஹபீப் முகமது மற்றும் செந்தில் என்ற பெயர்களில் உள்ளது என கிராம நிர்வாக அலுவலர் பின்னைநல்லூர் அவர்கள் அளித்த ஆவணத்தின்படி உறுதி செய்யப்படுகிறது. இம்மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்து தர மனுதாரர் கோரியுள்ளார். பெயர் மாற்ற விண்ணபத்துடன் VAO சான்று, வீட்டு வரி ரசீது நகல் மற்றும் பட்டா அல்லது பத்திர நகல் ஆகிய ஆவணங்களை இணைத்து உதவி பொறியாளர்/இ&ப/மாரியம்மன் கோவில் அலுவலகத்தில் கொடுத்து தனது பெயரில் மாற்றிக்கொள்ளலாம் என மனுதாரருக்கு முன்னதாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. பெயர் மாற்றம் விண்ணப்பமும் மனுதாரரருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**5.4** மேற்படி மனுதாருக்கு மின்இணைப்பு எண்.**468–003–351**, **468–003–353** மற்றும் **468–003–83** தொடர்பாக அனைத்து விபரங்களும் மனுதாரருக்கு பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மனுதாரர் குறைதீர் மன்றம் தஞ்சையில் இரண்டு முறை மனு அளித்து மனுதாரர் இசைவிணக்கத்தில் கலந்து கொள்ளாமல் தீர்வு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து Tamil Nadu Electricity Ombudsman, Chennai–ல் மேல்முறையீடு எண்.**33/2014** ன் படி பதிவு செய்து தீர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதை மேல் நடவடிக்கைக்காக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## 6. மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை

**6.1** மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.4.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

**6.2** மேல்முறையீட்டாளர் நோய் காரணமாக நேரில் ஆஜராக இயலாமைக்கு வருத்தம் தெரிவித்து தன்னுடைய எழுத்துப்பூர்வமான வாதுரையை தெரிவித்துள்ளார்.

**6.3** எதிர்மனுதாரர் திரு. தெ. கோபிநாதன், உதவி பொறியாளர்/மாரியம்மன் கோவில் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

## 7. எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்

**7.1** உதவி பொறியாளர்/மாரியம்மன் கோவில் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்கள் மீண்டும் வலியுறுத்தினார்.

**7.2** உதவி பொறியளர்/மாரியம்மன் கோவில் அவர்கள் மின்இணைப்பு எண்.351ல் மின்இணைப்பு மின்துண்டிப்பு செ சய்த நாள்16.9.2011 என்றும் 16.8.2013 அன்று மேற்கண்ட மின்இணைப்பு நிரந்தர மின்துண்டிப்பு செய்யப்பட்டுவிட்டது என்றும், மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி 22(7)ன் படி மின்துண்டிப்பு செய்து 2 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் அதற்கு மறு மின்இணைப்பு வழங்க இயலாது என்றும் வாதிட்டார்.

**7.3** மேலும், இந்த கோரிக்கை மின்குறைதீர்ப்பாளரால் மேல்முறையீட்டு மனு எண்.33/2014ல் ஏற்கெனவே தீர்வு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தார்.

**7.4** மின்இணைப்பு எண்.353ல் பெயர் மாற்றம் திரு. சம்பத் என்பவரின் பெயருக்கு உரிய ஆவணங்கள் பெறப்பட்டுதான் மாற்றப்பட்டுள்ளது என்று வாதிட்டு பெயர் மாற்றத்திற்கான ஆவணங்களின் நகல்களையும் ஆதாரமாக சமர்ப்பித்துள்ளார்.

**7.5** எதிர்மனுதாரர் மேலும், மேற்கண்ட வீட்டிற்கான 2014–2015 வருடத்திற்கான பஞ்சாயத்து வரி ரசீது திரு. ஆர் சம்பத் பெயரில் உள்ளது என்றும், திரு. சம்பத் அவர்கள் மேற்கண்ட இடத்தை விலைக்கு வாங்கிய ஆவணத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார் என்று வாதிட்டுள்ளார்.

**7.6** மேலும், கிராம நிர்வாக அலுவலரின் 8.3.2016 ஆவணத்தின்படி பட்டா எண்.723, புல எண்.174/59 என்ற சொத்து திரு. சம்பத் அவர்களுக்கு உடமையாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

7.7 ஒரு மின் இணைப்பின் மின்கட்டணம் செலுத்தப்பட்டால், அந்த மின்இணைப்பின் உரிமையாளர் பெயரில் ரசீது தரப்படும் என்றும், உரிமையாளருக்காக அவரின் சார்பில் யார் மின்கட்டணத்தை செலுத்தினாலும் பெற்றுக் கொள்ளப்பட்டு உரிய ரசீது வழங்குவது வாரியத்தின் வழக்கத்தில் உள்ளது என்றும் தெரிவித்தார். மின் இணைப்பில் உள்ள நிலுவைத் தொகை செலுத்தியுள்ளதால் மறு மின்இணைப்பு வழங்கப்பட்டது என்றும் தெரிவித்து அதில் முறைகேடு எதுவும் இல்லை என்றும் வாதிட்டார்.

7.8 மின்இணைப்பு எண்.468–003–83 திரு. மைதீன் பாச்சா என்பவர் பெயரில் உள்ளது. மேற்கண்ட மின்இணைப்பு உள்ள இடம் தற்பொழுது திரு. ஹபீப் முகமது மற்றும் செந்தில் என்பவர்கள் பெயரில் உள்ளது என்று கிராம நிர்வாக அலுவலர் பின்னைநல்லூர் அளித்துள்ள ஆவணத்தின்படி தெரிகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களுடன் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்தால் பரிசீலிக்கப்பட்டு அவை சரியாக இருப்பின் பெயர் மாற்றம் செய்ய முடியும் என்ற தகவலையும் தெரிவித்தார்.

7.9 மேலும், தன்னுடைய 2.5.2016 நாளிட்ட கடிதத்தில் மின்இணைப்பு எண்.468–003–353 உள்ள இடத்தை 8.3.2016 அன்று ஆய்வு செய்யப்பட்டது என்றும் அந்த இடத்தில் திரு. சம்பத் என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றும் அம்மின் இணைப்பு வீட்டு உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கோரிக்கை வாரியாக கீழ்கண்ட தீர்வு வழங்கப்படுகிறது.

## 8.2 <u>கோரிக்கை ஒன்றிற்கான தீர்வு</u>

8.2.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண்.351ற்கு மறு மின்இணைப்பு (Reconnection) வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

8.2.2 எதிர்மனுதாரர் மேற்கண்ட மின்இணைப்பு எண்.16.9.2011 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், நிலுவைத் தொகையான ரூ.4/–ஐ செலுத்தாத காரணத்தால் அம்மின் இணைப்பு நிரந்தர துண்டிப்பு செய்யப்பட்டுவிட்டது என்றும் அந்த அறிவிப்பு கடிதம் மின்நுகர்வோர் பூட்டியிருந்த காரணத்தால் அவ்வீட்டின் கதவில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அந்த மின்இணைப்பின் கணக்கு முடிக்கப்பட்டு நுகர்வோருக்கு 27.12.2014 அன்று கடிதம் வழங்கப்பட்டது என்றும், மேலும், அவ்வாறு அளிக்கப்பட்ட

கணக்கு முடிவு அறிக்கையில் சிறிய தவறு இருந்ததால் மறு கணக்கு முடிவு அறிக்கை செய்யப்பட்டு 25.7.2014 அன்று நுகர்வோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

8.2.3 மேலும், மேற்கண்ட கோரிக்கை ஏற்கனவே மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு மேல்முறையீட்டு மனு எண்.33/2014ல் வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

8.2.4 எதிர்மனுதாரர் மேற்கண்ட கோரிக்கைக்கு ஏற்கெனவே மின்குறைதீர்ப்பாளரால் மேல்முறையீடு மனு எண்.33/2014ல் தீர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதால் மேற்கண்ட மேல்முறையீட்டு மனு எண்.33/2014ன் 1.8.2014 நாளிட்ட ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*"1. __மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:__*

*மேல்முறையீட்டாளரின் கீழ்கண்ட கோரிக்கைகளை தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்.*

*(i) மின்இணைப்பு எண்.351ல் நாளதுவரை உள்ள நிலுவைத்தொகையை செலுத்தவும், மறு இணைப்பு அளிக்க உத்தரவும் செய்ய வேண்டும்.*

*(ii) மின்இணைப்பு எண்.353ல் முறைகேடான உபயோகம் உள்ளது என்றும், அமுதா (645/9, 2208/12 பத்திபடி) சம்பத் இருவர் பேரில் நடவடிக்கை எடுக்கவும், மின்இணைப்பு மனுதாரருக்கு உரிமை உடையது என உறுதி செய்யவும் வேண்டும்.*

*(iii) 351, 353 மற்றும் 83 ஆகிய மூன்று மின்இணைப்புகளின் பெயர் (ஹபீப் முகமது) மாற்றம் செய்ய உரிய ஆவணப்படிவம் (மாதிரி) அளிக்கவும் அதன்படி மனுதாரர் படிவம் கட்டணம் பெறப்பட்டு பெயர் மாற்றம் செய்ய உத்தரவு செய்ய வேண்டும்.*

*xxx xxx xxx*
*xxx xxx xxx*

***10. __கோரிக்கை ஒன்றிற்கான தீர்வு__***

*xxx xxx xxx*
*xxx xxx xxx*

*10.12 இந்த மின்இணைப்பு எண்.351 மின்துண்டிக்கப்பட்ட தேதி 16.9.2011. எனவே, மின்வழங்கல் விதித்தொகுப்பின் 22(6)(i)ல் தெரிவித்துள்ள மறு மின்இணைப்பு பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள 2 வருட காலக்கெடு முடியும் நாள் 15.9.2013 ஆகும். ஆனால், மேல்முறையீட்டாளர் மறு மின்இணைப்பு கோரும் மனுவை, தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்பித்த மனுவின் நாள் 16.12.2013 ஆகும். எனவே, அவரின் மறு மின் இணைப்பு கோரும் மனு 2 வருடங்கள் கடந்த பின்பு தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது.*

*10.13 மேல் முறையீட்டாளரின் மறுமின் இணைப்பு கோரும் மனுவானது மின் இணைப்பு எண் 351ஐ துண்டிக்கப்பட்ட இரண்டு வருட காலத்திற்குள் சமர்பிக்கப்படவில்லை என்பதினால் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பின் விதி 22(7) ன்படி, மேல் முறையீட்டாளர் மறு மின் இணைப்பு பெறமுடியாது என்றும், அவருடைய விண்ணப்பம் புதிய மின் இணைப்பு கோரும் விண்ணப்பமாகத் தான் கருதப்படும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.*

8.2.5 மேற்கண்ட கோரிக்கை ஏற்கனவே மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு செய்யப்பட்ட கோரிக்கை என்பதால் நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)(இ)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

17(4) கீழ்க்குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும் மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

*xxx xxx xx*
*xxx xxx xxx*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*xxx xxx xx*
*xxx xxx xxx*

8.2.6 மேற்கண்ட விதியை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது மின்குறைதீர்ப்பாளரால் முந்தைய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல்பொருள் (subject matter) கொண்ட முறையீடு அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எந்த தரப்பினரிடமிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று அறிய முடிகிறது.

8.2.7 இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஒன்று மேல்முறையீட்டு மனு எண்.33/2014 முதல் கோரிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டு மின்குறைதீர்ப்பாளரால் 1.8.2014 அன்று தீர்வு வழங்கப்பட்டுள்ளதால் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளின் விதி 17(4)(இ)ன் படி மின்குறைதீர்ப்பாளரால் மீண்டும் தீர்வு வழங்க இயலாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 8.3 <u>கோரிக்கை இரண்டிற்கான தீர்வு</u>

8.3.1 இந்த மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.353ஐ 20.8.2014 அன்று திரு. சம்பத் அவர்களின் பெயருக்கு மாற்றம் செய்தது தவறு என்று வாதிட்டுள்ளார்.

8.3.2 மின்இணைப்பு எண்.353, 12/2007 முதல் திரு. ஆர்.ஈ.அப்துல் கரீம் என்ற பெயரில் உள்ளது. ஆனால், திரு. ஆர்.ஈ. அப்துல் கரீம் என்ற பெயருக்கு மின்இணைப்பை மாற்றியது பற்றிய ஆவணம் இல்லை என்று மேல்முறையீட்டாளர் வாதிட்டுள்ளார்.

8.3.3 4/2009, 6/2009, 8/2009 மற்றும் 10/2009 ஆகிய கணக்கீடு காலங்களுக்கான மின்கட்டணத்தொகை ரூ.266/—ஐ செலுத்தி மூன்றாவது நபர் முறைகேடாக மறு மின்இணைப்பு பெற்றுள்ளார் என்றும் வாதுரை புரிந்துள்ளார்.

8.3.4 எதிர்மனுதாரர் மேற்கண்ட மின்இணைப்பு திரு. ஆர்.ஈ. அப்துல் கரீம் பெயரில் இருந்து கடந்த 21.8.2014 அன்று திரு. சு. சம்பத் என்பவர் இம்மின் இணைப்பு உள்ள இடம் தனக்கு உரிமை உள்ளது என்பதற்கான வருவாய் ஆவணங்கள் VAO சான்று, வீட்டு வரி, பட்டா மற்றும் பத்திர நகல் ஆகியவற்றை அளித்து தன்னுடைய பெயரில் மாற்றம் செய்துள்ளார். மேலும், பெயர்மாற்றம் செய்ய பெறப்பட்ட ஆவணங்களின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

8.3.5 மேலும், பின்னைநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் பட்டா எண்.723, புல எண்.174/59க்கான உரிமை ஆவணங்கள் மின்வாரிய தரப்பில் கோரப்பட்டு 8.3.2016 அன்று பெறப்பட்டுள்ளது என்றும் அந்த ஆவணத்தின்படியும் மேற்படி புல எண் திரு. சு.

சம்பத் அவர்கள் பெயரில் உள்ளது என்று உறுதி செய்யப்பட்டது என்றும் எதிர்மனுதாரர் வாதிட்டுள்ளார்.

**8.3.6** மேலும், மின்கட்டணங்களை பொறுத்தவரையில் மின்கட்டணம் எந்த மின்இணைப்பிற்காக செலுத்தப்படுகிறதோ அந்த மின்இணைப்பின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அந்த மின்இணைப்பு எண்ணிற்கான ரசீது வழங்கப்படும் என்றும் மின்கட்டணத்தை உரிமையாளரின் சார்பில் யார் செலுத்தினாலும் மின்கட்டணம் பெறப்படும் என்றும் வாதிட்டார். மேலும், நிலுவைக் கட்டணம் ரூ.**266/–** செலுத்தப்பட்டதால் மறு மின்இணைப்பு (Reconnection) கொடுக்கப்பட்டது என்றும் அதில் முறைகேடு இல்லை என்றும் வாதிட்டுள்ளார்.

**8.3.7** இங்கு மின்இணைப்பின் பெயர் மாற்றம் தவறு என்று வாதிடப்படுவதால் நான் ஒரு மின்இணைப்பின் பெயரை மாற்ற தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பில் கூறப்பட்டுள்ள விதி **5(7)**ஐ ஆராய விரும்புகிறேன்.

***"5. Miscellaneous charges***
*xxx xxx xxx*
*xxx xxx xxx*
***(7) Name Transfer charge***

*(i) Every application for transfer of name consequent to the death of the consumer shall be in Form (1) in Appendix to this code accompanied by :*

*(a) Legal heirship certificate from the Tahsildar concerned or proof of ownership such as local body tax receipts (latest).*

*(b) No objection certificate from other legal heirs, if any, (or) an indemnity bond in Form (3) in Appendix to this Code on non-judicial stamp paper for a value of Rs.80/- and a sworn-in affidavit and authenticated by a Notary Public or by a gazetted officer to show the status of other legal heirs.*

*(c) Fresh application with fee to be specified by the Commission and agreement form.*

*(ii) Every application for transfer of name, in other cases, shall be in Forms (1) and (2) in Appendix to this Code accompanied by-*

*a) The document supporting the transfer with an undertaking in Form (4) in Appendix to this Code*

*(b) Consent letter from the consumer for the transfer of the Security Deposit [4][if it is not included in the document supporting the transfer.*

*(c) Fresh application with fee to be specified by the Commission and agreement form.*

*Explanation: The name transfer is effected only for such services which are not under disconnection."*

**8.3.9** மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒரு மின்இணைப்பின் பெயர் மாற்றம் ஒரு நுகர்வோர் இறந்தால் எப்படி செய்யப்படவேண்டும் என்று மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(i)ல் விவரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாமல் மற்ற நேர்வில் மின்இணைப்பின் பெயர்மாற்றம் எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பது மின்வழங்கல் விதித்தொகுபிபின் விதி 5(7)(ii)ல் விவரிக்கப்பட்டுள்ளது.

**8.3.10** இந்த வழக்கிலுள்ள மின்இணைப்பு எண் பெயர் மாற்றம், மின்இணைப்பு உள்ள இடம், விலைக்கு வாங்கப்பட்டதால் செய்யப்பட்டுள்ளதால் 5(7)(ii)ன் படி தான் இருக்க வேண்டும் என்பதால் அந்த விதிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(அ) பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பங்கள் மின்வழங்கல் விதித்தொகுப்பின் பின்ணிணைப்பிலுள்ள படிவம் (1) மற்றும் (2)ன் படி தான் இருக்க வேண்டும்.

(a) வழங்கல் விதித்தொகுப்பின் பின்ணிணைப்பில் உள்ள படிவம் (4)ல் உள்ள உறுதி ஏற்புடன் பெயர் மாற்றத்திற்கான அடிப்படை ஆவணம்.

(b) காப்பு வைப்புத்தொகை மாற்றம் சம்பந்தமாக பெயர்மாற்றத்திற்கான அடிப்படை ஆவணத்தில் எதுவும் கூறப்படவில்லை என்றால் காப்பு வைப்புத்தொகை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக்கடிதம் அத்தகைய கடிதம் தரப்படாவிடில் புதிதாக காப்புத்தொகை கட்ட வேண்டும்.

(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம், புது விண்ணப்பம் மற்றும் இசைவு பத்திரம்.

**8.3.11** மேலும், பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பம் படிவம் (1) மற்றும் (2) ன்படி இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதால் அந்த படிவங்களின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***[Appendix] FORM-1 [Refer to Regulation 5(7)]***

*To*

*The Designated Engineer,*

*……………………………,*

*………….*

*I, Thiru ...................................... (S/o)/ (D/o)/ (W/o) ................................... aged ……. Years, am residing at*

*(Full Address & Phone No.)*
*……………………………………………………………………………………….....................*

*………………………………………………………………………………………………*

*The premises bearing Door No. .............. Name of Street.................................... Village / Town …………………………………. Taluk with Service Connection No. ...... Tariff ……………………………... Distribution ………………………………………. In the name of …………………………………………..*
*S/o………………………………………………………… is in my possession.*

*(1) The Xerox copy of the sale deed in my favour for the said premises is enclosed.*

*or*

*The property tax receipt for the above property is given in my name and Xerox copy of the same duly attested by Gazetted Officer is enclosed.*

*or*

*Metro Water / Sewerage Connection is given in my name and the Xerox copy of the same duly attested by Gazetted Officer is enclosed.*

*or*

*Legal Heirship Certificate from the Tahsildar concerned*

*(2) Application and Agreement Form*

*(3) Indemnity Bond on Rs.80/- Non-judicial stamp paper (Applicable in the case of name transfer due to legal succession)*

*I undertake to pay amounts outstanding against the Account No.……… which are found to be due at a later date.*

*I request that the name of Service No. …………………… may kindly be changed to my name.*

*Signature of transferee,*
*Full Address.*

*Place:*
*Date :*

***FORM-2***
***NAME TRANSFER FORMS [REFER TO REGULATION 5 (7)]***
*(To be used as a consent letter from transferor in case of sale etc.)*

*To*

*The Designated Engineer / ………...*

*Address of the Licensee Engineer*

*I..........................................(S/o. D/o. W/o.) ........................................owner of premises bearing Door No. .............(Name of the Street …….. Place …………………..) hereby give my consent for the transfer of service bearing A/c. No. ................standing in my name / in the name of ……… to Thiru/Tmty.] ......................................S/o. D/o. W/o. .........................................since I had sold my house to him/her.................................*

*The transfer may be effected with available deposit / subject to the condition that the transferee pays the security deposit and other charges *.*

*Signature of transferor,*
*Full Address.*

*Place*
*Date*
* *Strike out the portion not required*

**8.3.12** மேற்கண்ட படிவங்களை கூர்ந்து ஆராயும்பொழுது நாம் அறிவது படிவம் (1) என்பது மின்இணைப்பின் பெயர் மாற்றம் கோருவோர் பெயர் மாற்றத்திற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பம் ஆகும். அதில் மின்இணைப்பு உள்ள இடம் அவருக்கு உரிமை என்பதற்கான ஆவணத்தின் நகலையும் இணைக்க வேண்டும்.

**8.3.13** படிவம் (2) என்பது, மின்இணைப்பு யாருடைய பெயரில் உள்ளதோ அவர் மேற்கண்ட மின் இணைப்பின் பெயர் மாற்றத்திற்கு சம்மதம் தெரிவிக்கும் சம்மதக்கடிதம் ஆகும். அந்த சம்மதக்கடிதத்தில் மின்இணைப்பின் கணக்கிலுள்ள வைப்பு தொகையுடன் பெயர் மாற்றம் செய்யலாம் என்றோ அல்லது வைப்பு தொகையில்லாமல் பெயர் மாற்றம் செய்யலாம் என்றோ மேற்கண்ட மின்இணைப்பின் உரிமையாளர் தெரிவிக்கலாம்.

**8.3.14** இந்த வழக்கில் பெயர் மாற்றத்திற்கான ஆவணங்களின் நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(1) பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பம் படிவம் –1

(2) படிவம்–2 (பெயர் மாற்றம் தருபவர் அளிக்கும் சம்மதக்கடிதம்)

(3) காப்புறுதி பத்திரம் படிவம் –3

(4) உறுதியேற்பு பத்திரம் படிவம் –4

(5) சோதனைத்தாள்

(6) மின்இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்

(7) திரு. ஆர். சம்பத் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது எண்.619907 நாள் 4.3.2014

(8) திருமதி. எஸ். ஜம்ரத் பேகம் அவர்கள் எழுதி கொடுத்துள்ள சுத்த கிரைய சாசனப்பத்திரம்

(9) Indemniy Bond in Stamped paper of value Rs.80/–

8.3.15 மேற்கண்ட ஆவணங்களின்படி திரு. ஆர். சம்பத் அவர்கள் மின்இணைப்பு எண்.353 உள்ள வீட்டிற்கு உரிமையாளர் என்பதற்கு ஆதாரமாக

(i) ஊராட்சி அலுவலகம், மாரியம்மன் கோவில் வழங்கிய 20.12.2013 மற்றும் 2013–14 ஆகிய ஆண்டுகளுக்கு செலுத்திய வரி (ரூ.110/–) ரசீது எண்.619907 நாள் 4.3.2014

(ii) திருமதி. எஸ். ஜம்ரத் பேகம் அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிய பதிவு செய்யப்பட்ட கிரைய சாசன பத்திரத்தின் எண்.2208/2012.

8.3.16 மின் வழங்கல் விதிதொகுப்பு விதியின்படி அந்த வீட்டிற்கான சொத்து வரி ரசீது அல்லது விற்பனை பத்திரத்தின் நகல் இவைகளில் ஏதேனும் ஒன்று இருந்தால் போதும். ஆனால், இங்கு இரண்டு ஆவணங்களின் நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே, உரிமைச் சான்றிதழ் விதிகளின்படி தான் உள்ளது.

8.3.17 மேலும், விதிகளில் உள்ளபடி படிவம்–1, படிவம்–2, மற்றும் படிவம்–4 ஆகியவைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆவணங்களுடன் படிவம்–3 மற்றும் Indemnity Bond–ம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பெயர் மாற்றம் மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)ன் படிதான் உள்ளது என்று தெரிகிறது.

8.3.18 மேற்கண்ட பெயர் மாற்றம் மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(ii)ற்கு இணங்க உள்ளதால் திரு. ஆர். சம்பத் பெயரில் மின்இணைப்பு எண்353ஐ மாற்றியது சரிதான் என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 8.4 <u>கோரிக்கை மூன்றிற்கான தீர்வு</u>

8.4.1 மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.353ல் 2/2009 முதல் முறைகேடான உபயோகம் உள்ளது என்று வாதிட்டுள்ளார். ஆனால், எந்தவிதமான முறைகேடு என்பதை விபரமாக தெரிவிக்கவில்லை.

8.4.2 அவரின் புகாரின் பெயரில் மின்இணைப்பு மின் அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு முறைகேடான உபயோகம் இல்லை என்று வாய்மொழியாக தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

8.4.3 எதிர்மனுதாரர், மின்இணைப்பு எண்.353, IA என்ற கட்டண வீதப்பட்டியலில் உள்ளது என்றும், வாதிட்டுள்ளார். மேலும், மேற்கண்ட மின்இணைப்பை 8.3.2016 அன்று ஆய்வு

செய்யப்பட்டுள்ளது என்றும், மின்இணைப்பு உள்ள இடத்தில் திரு. ஆர். சம்பத் அவர்கள் குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்று உறுதி செய்யப்பட்டது என்றும் மேலும், அந்த மின்இணைப்பு வீட்டு உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்றும் உதவி பொறியாளர்/மாரியம்மன் கோவில் அவர்கள் தன்னுடைய 2.5.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

8.4.4 எதிர்மனுதாரரால் மின்இணைப்பு எண்.353 உள்ள இடத்தை 8.3.2016–ல் ஆய்வு செய்து அந்த இடத்தில் வீட்டு உபயோகத்திற்கு மட்டுமே மின்இணைப்பு பயன்படுத்தப்படுகிறது என்று வாதிட்டு அந்த மின்இணைப்பு IA என்ற கட்டண வீதப்பட்டியலில் உள்ளது என்று தெரிவித்துள்ளதால், மேற்கண்ட மின்இணைப்பு விதிகளின்படி சரியான கட்டண பட்டியலின்படிதான் உள்ளது என்று தெரிகிறது.

**8.5 <u>கோரிக்கை நான்கிற்கான தீர்வு</u>**

8.5.1 மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.351, 353 மற்றும் 83 ஆகியவை மனுதாரரின் உரிமை ஆவணம் 317/85 பட்டா எண்.627, 597 உள்ள இடத்தில் உள்ளது என்று உறுதி செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

8.5.2 மேலும், மனுதாரர் உரிமை ஆவணம் 317/85ன் படி பட்டா எண்.627 புல எண்.174/21ல் மின்இணைப்பு எண்.353ம் பட்டா எண்.597 புல எண்.174/20ல் மின்இணைப்பு எண்.351ம் பட்டா எண்.597,புல எண்.173/48ல் மின்இணைப்பு 83ம் உள்ளன என்றும் வாதிட்டுள்ளார்.

8.5.3 எதிர்மனுதாரர் மின்இணைப்பு எண்.83 திரு. மைதீன்பாச்சா என்பவர் பெயரில் உள்ளது. மின்இணைப்பு உள்ள இடம் தற்பொழுது திரு. ஹபீப் முகமது மற்றும் திரு. செந்தில் என்ற பெயர்களில் உள்ளது என கிராம நிர்வாக அலுவலர் அளித்த ஆவணத்தின்படி உறுதி செய்யப்படுகிறது என்று தெரிவித்து மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களுடன் பெயர் மாற்றம் கோரி விண்ணப்பித்தால் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு சரியாக இருந்தால் பெயர் மாற்றம் செய்யப்படும் என்றும் மேற்கண்ட தகவல் மனுதாரருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

8.5.4 இந்த கோரிக்கையில் மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.351, 353 மற்றும் 83 ஆகியவை அவரின் உரிமை ஆவணம் 317/85ல் தெரிவித்துள்ள 627, 597 உள்ள இடத்தில் உள்ளது என்று உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

**8.5.5** ஒரு இடத்தின் உரிமையை உறுதி செய்வது மின்குறைதீர்ப்பாளரின் வரம்பிற்கு அப்பாற்பட்டது ஆகும். எனவே, மேற்கண்ட மின்இணைப்புகள் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான இடத்தில் உள்ளன என்ற கோரிக்கை பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**9.** **<u>முடிவுரை</u>**

**9.1** <u>கோரிக்கை –ஒன்று</u>

பத்தி **8.2–**ல் உள்ள தீர்வின்படி இந்த கோரிக்கை மேல்முறையீட்டு மனு எண்.**33/2014–**ல் முதல் கோரிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டு மின்குறைதீர்ப்பாளரால் **1.8.2014** அன்று ஏற்கெனவே தீர்வு வழங்கியுள்ளதால் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதித்தொகுப்பின் விதி **17(4)(இ)**ன் படி மேற்கண்ட கோரிக்கைக்கு மீண்டும் தீர்வு வழங்க இயலாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**9.2** <u>கோரிக்கை –இரண்டு</u>

பத்தி **8.3–**ல் உள்ள கோரிக்கை இரண்டிற்கான தீர்வின்படி மின்இணைப்பு எண்.**353**ஐ திரு. ஆர். சம்பத் என்ற பெயருக்கு மாற்றியது தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் விதி **5(7)(ii)**ற்கு இணங்க உள்ளதால் மேற்கண்ட பெயர் மாற்றம் சரிதான் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**9.3** <u>கோரிக்கை–மூன்று</u>

எதிர்மனுதாரர், மின்இணைப்பு எண்.**353** உள்ள இடத்தை **8.3.2016**ல் ஆய்வு செய்து அந்த இடத்தில் வீட்டு உபயோகத்திற்கு மட்டுமே மின்இணைப்பு பயன்படுத்தப்படுகிறது என்றும், எனவே, அந்த மின்இணைப்பு IA என்ற கட்டண விகிதத்தில் வசூல் செய்யப்படுகிறது என்று தெரிவித்துள்ளதால் மேற்படி மின்இணைப்பு சரியான மின்கட்டண பட்டியல்படிதான் உள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**9.4** <u>கோரிக்கை–நான்கு</u>

**9.4.1** மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு எண்.**351, 353** மற்றும் **83** ஆகியவைகள் அவரின் உரிமை ஆவணம் **317/85**ல் தெரிவித்துள்ளதால் பட்டா எண்.**627, 597** என்ற இடத்தில் உள்ளது என்று உறுதி செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

**9.4.2** மேற்கண்ட மின்இணைப்புகள் உள்ள இடம் அவருக்கு உரிமையானது என்று உறுதிப்படுத்துவது ஒரு இடத்தின் உரிமை பிரச்சனை ஆகும். அது மின் குறைதீர்ப்பாளரின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்பதால் மேற்கண்ட கோரிக்கைக்கு மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு எதுவும் வழங்க இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது.

**9.5** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.12/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திரு. M. ஹபீப் முகமது,
த/பெ மைதீன் பாச்சா,
5/79, V.P. நகர்,
பண்டாரவாடை – 614 204,
பாபநாசம் வட்டம்,
தஞ்சாவூர் வட்டம்.

2) உதவி பொறியாளர்/இ&ப.
மாரியம்மன் கோவில்
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நாகை மெயின் ரோடு,
மாரியம்மன் கோவில் – 613 501.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்)
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர் – 613 009.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.